# 3

# மார்க்ஸிய இரசனையியல் உணர்வும் அதன் அவசியமும்

- முபிஸால் அபூபக்கர்

## அறிமுகம்

கார்ல் ஹென்றி மார்க்ஸ் ஜேர்மனியின் டிரியர் எனும் நகரில் 1818 மே மாதம் 5ம் திகதி ஹென்றிச் மார்க்ஸ் என்பவரின் மகனாகப் பிறந்தார். சட்டப்படிப்பை போர்ன் (Born) பல்கலைக்கழகத்திலும் போர்லின் பல்கலைக்கழகத்திலும் மேற்கொண்டார். சட்டம், வரலாறு, மெய்யியல், கலை, இலக்கியம், அழகியல் போன்ற பல்வேறுபட்ட துறைகளில் விரிவான வாசிப்புக்களையும் ஆய்வுகளையும் மேற்கொண்டார்.

தனது கலாநிதிப்பட்ட ஆய்வுக்காக 'டிமொக்ரடிஸின் இயற்கை மெய்யியலுக்கும் எபிக்கூரியரின் இயற்கை மெய்யியலுக்கும் இடையிலான வேறுபாடுகள்' என்ற தலைப்பில் கிரேக்க மெய்யியல் தொடர்பாக அவர் செய்த ஆய்வுக்காக ஜேனே பல்கலைக்கழகம் அவருக்கு 1841இல் கலாநிதிப் பட்டத்தை வழங்கியது.

மார்க்ஸ் 1830 களில் இருந்தே தனது நண்பரான ஏங்கல்ஸ் (1820 -1895) உடன் இணைந்து சமயம், ஹெகல், பாயர்பாஹ் போன்றோரின் வாசிப்புக்களிலும், விமர்சனங்களிலும் ஈடுபட்டார். பின்னர் லண்டன் நூதனசாலையில் உள்ள நூல்களைப் படித்து அரசியல், பொருளாதாரத்தில் தேர்ச்சி பெற்றார். 1850-51 களில் அரசியல் பொருளாதாரம் தொடர்பில் பல சொற்பொழிவுகள் ஆற்றினார். விஞ்ஞானத்தில் ஆழமான அறிவைக் கொண்டிருந்த அவர் சமூக செயற்பாடுகளையும் விஞ்ஞான நோக்கில் அமைப்பதற்கான கோட்பாடுகளையும் உருவாக்கப் பாடுபட்டார். 1859ல் 'அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய விமர்சனம்' என்ற அவரது நூல் வெளிவந்தது. 1867ல் 'மூலதனம்: முதலாளித்துவ உற்பத்தி குறித்த ஒரு விமர்சன ஆய்வுரை' என்ற அவரது படைப்பு வெளிவந்தது. மார்க்ஸ் சிறந்த மொழி வல்லுநர், ஜேர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம் போன்றவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தார். 1883 மார்ச் 14ல் மார்க்ஸ் தனது 65ம் வயதில் மரணித்தார். அவரது உடல் லண்டனில் ஹைகேட் என்ற இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மார்க்ஸின் இளமைக்கால ஆய்வுகளில் மனித நலவாதம், உழைப்பு, அந்நியமாதல் என்பன முக்கியம் பெற்றன.

மார்க்ஸின் இளமைக்கால ஆய்வுகளில் மனித நலவாதம், உழைப்பு, அந்நியமாதல் என்பன முக்கியம் பெற்றன. அதன் வழியாக மனித இயல்பு இயற்கையும், மனிதரும் பற்றிய ஆய்வுகளை நோக்கி அவரது கவனம் திரும்பியமையும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

**மார்க்ஸிய இரசனையியல்**

மார்க்ஸின் இரசனையியல் கருத்து மனித தேவையுடன் தொடர்புபடுத்தி நோக்கப்படுகின்றது. இன்னும் தேவையும் இரசனையும் ஒன்றோடு ஒன்று இணைந்தவையாக நோக்கப்படுவது மட்டுமல்ல மார்க்ஸின் 'தேவை' எண்ணக்கருவை முழுமையான அர்த்தத்தில் பார்க்க வேண்டு மாயின் கலை என்ற அம்சத்தையும் இணைப்பது பொருத்தமாகும். தேவைக்கும், கலைக்கும் உள்ள தொடர்பு இலகுவில் உணர்த்தப்படக் கூடியதல்ல. கலையையும் தேவைகளையும் இரு துருவங்களாகக் காண்பதற்கு ஒரு மரபுள்ளது. தேவையிலும் பயனிலுமே கலை விதிகள் ஒன்றிணைந்து உள்ளன என மார்க்ஸ் கூறுவது மற்றுமொரு மரபில் இருந்து வருவதாகும்.

தேவைக்கும், கலைக்கும் உள்ள தொடர்பு இலகுவில் உணர்த்தப்படக் கூடியதல்ல. கலையையும் தேவைகளையும் இரு துருவங்களாகக் காண்பதற்கு ஒரு மரபுள்ளது.

விலங்குகள் தாம் உயிர் வாழ்வதற்கு தேவையான அளவிற்கே செயல்களில் ஈடுபடுகின்றன, பறவைகள் கூடு கட்டுகின்றன, எறும்புகள் புற்று அமைக்கின்றன. விலங்கு தன்னைத்தானே மறு படைப்பு செய்கின்றது. மனிதனோ இயற்கை முழுவதையும் மறு படைப்பு செய்கிறான். விலங்கின் படைப்பு உடனேயே அதன் உடலிற்கு உரித்தாகிறது. மனிதனோ சுதந்திரமாக தன் படைப்பை எதிர்கொள்கிறான். விலங்கு தன் உயிரினத்தின் தேவையையும் குணத்தையும் பொறுத்தே தேவைகளை ஆக்குகின்றது. மனிதனோ எல்லா உயிரினங்களின் குணங்களுக்கும் ஏற்றபடி எப்படி படைப்பதென்பதை அறிவான். எனவே அழகின் விதிகளுக்கேற்ப படைக்கின்றான் (Karl Marx, *1976: 73,74*).

மனிதர் கலையைத் தனியாகப் படைக்கின்றனரா? அல்லது மனிதரால் படைக்கப்படுகின்றனவெல்லாம் கலைப் படைப்பெனக் கொள்ளலாமா? என்ற கேள்விக்கு இம்மரபுகள் வேறு விடைகளை வழங்கக் கூடும். மனிதர் தமது தேவைக்களுக்கென படைத்துக் கொள்ளும் நிர்மாணங்களில் உள்ள கலை ஒழுங்கு பற்றி மார்க்ஸ் அழுத்தமாகக் கூறினார். தமக்கெனப் பயன் தரும் பொருள் ஒன்றை மனிதர் படைக்கும் போது அதில் விதிகளும் கற்பனைகளும் தமது படைப்பென்ற பற்றும் ஒன்று கலந்து விடுகின்றன. பிரத்தியேகமான அழகுகளுக்காக மட்டும் அந்தப் படைப்பு மூன்றாம் கட்ட நிலைக்குரியதாகும். அதாவது,

*01.* இயற்கை

*02.* இயற்கையைப் பயன்படுத்தி பயனுக்காக படைத்தவை

*03.* பயன் கருதாது மகிழ்வுக்காக படைக்கப்பட்டவை

ஆகிய மூன்று பிரிவுகளையும் கூற முடியும். அழகின் விதியும், அந்நியமாதலுக்கான அதன் மறுப்பும் பற்றிய விளக்கமும் மனித மனநிலையின் நிறைவின் அடையாளமாக மார்க்ஸினால் முன்வைக்கப்படும் வாதத்தைக் கீழ்வரும் கூற்றுக்களில் இருந்து உணர்துகின்றது.

இயற்கையைப் பயன்படுத்தி பயனுக்காகப் படைக்கப் பட்டவை என்ற படைப்பு மனிதனுக்குப் பயனை மட்டுமன்றி திருப்தியையும் மகிழ்வையும் அளிக்கக் கூடியதாக உள்ளது.

இயற்கையைப் பயன்படுத்தி பயனுக்காகப் படைக்கப்பட்டவை என்ற படைப்பு மனிதனுக்குப் பயனை மட்டுமன்றி திருப்தியையும்

மகிழ்வையும் அளிக்கக் கூடியதாக உள்ளது. கதிரை, மட்பாண்டம், கம்பளி என்பன பயன் தரும் பொருட்களாகவும் அதேவேளை அவற்றுக்கே உரிய விதிகளையும் கொண்டவையுமாகும். கட்டுக் கோப்பும், ஒழுங்கும், சமச்சீரும், அலங்காரமும் அவற்றிலுள்ளன. இக் கருத்துப் பயனுக்கும் மேலதிகமான பண்புகள் அவற்றில் உள்ளன எனக் கூறுகின்றனர். இதனையே மார்க்ஸ் மனிதன் பொருட்களை 'அழகின் விதி (Law of Beauty)க்கேற்பவும் படைக்கின்றான்' என்றார். தன்னால் படைக்கப்பட்டவை என்ற ஆனந்தத்தையும் மனிதன் இவற்றைப் படைப்பதனால் பெறுகின்றான். அவற்றில் இருந்து பிரிக்கப்படும் போது அவன் அந்நியமாகின்றான். மன உணர்வும் கலைப் படைப்பும் ஒன்று சேரும் போதே அவன் முழுமை அடைகின்றான். இந்த உணர்வு வெளிப்படாத மனிதன் நிதமும் அந்நியமானதாகவே காணப்படுகின்றான். தன் உணர்வு, உறவு மற்றும் மனித சமூகம் ஏற்பனவற்றை அவன் தன்னிடமிருந்து தூரமானதாக எண்ணுகின்றான். செயற்படுகின்றான்(அனஸ். எம்.எஸ்.எம், *1999:277*).

மனிதன் இந்த மன மகிழ்வுக்குரிய அழகுணர்வைப் பயன் என்பதற்கு அப்பால் பிரத்தியேகமான கலைப்படைப்பினூடாக வெளிப்படுத்தும் நிலை அடுத்த கட்ட பரிமாணமாக வெளிப்படுத்தப்படுகிறது. அழகு விதிகளுக்கிசைவாக பொருட்களைப் படைக்கும் மனிதனின் ஆற்றலும் தனித்த நிலையில் கலைப்பொருட்களை அழகுக்காகப் படைக்கும் மனிதனின் ஆற்றலும் மனிதத் தன்மையின் மேலும் பரந்த அல்லது உயர்வான எல்லைகளுக்கு மனிதனை இட்டுச் செல்கின்றது. இதன் வழியாக புறவுலகு பற்றிய மனிதனின் அறிவும் புலனறிவும் எண்ணக் கருவாக்கமும் மேலும் விரிவு பெறுகின்றன. இயற்கையை அது அமைந்துள்ள அதே ஒழுங்கில் பார்த்தல் "பொருள் ஒன்றை தேவைக்கு மட்டும் என்ற நிலையில் ஒழுங்கற்றதாக உருவாக்குதல்" என்ற ஆதித் தன்மை வாய்ந்த திருத்தமற்ற வழிமுறைகளை இதன் மூலம் மனிதன் கடக்கின்றான் (மேலது நூல்: *278*).

கலை சிறப்பான மனிதத் தேவைகளிலிருந்து உருவாகின்றது. வெறும் பௌதீக பொருளாதார தேவைகளைக் கடந்து செல்கின்றது. கூடவே சிறப்பான தேவைகளை நிறைவு செய்வதன் மூலம் கலை அத்தேவைகளைப் படைக்கவும், வலுப்படுத்தவும் உதவுகிறது.

கண்கள் வெறுமனே பார்ப்பதற்கு, காதுகள் வெறுமனே கேட்பதற்கு என்று கண்களும் காதுகளும் அவற்றின் பௌதீக செயற்பாடுகளுக்கு மட்டும் உரியதாக இருக்கவில்லை. மனிதனின் கண்களும் காதுகளும் நேர்த்தியான இனிய இசைவான பொருள்களை ரசிக்கவும் ஏற்கவும் கூடிய தர உணர்வை வளர்த்துக் கொண்டுள்ளன. அவனது கண்கள் தான் படைத்த பொருட்களை கண்டு ரசிக்கும் கண்களாகவும் அவனது காதுகள் இனிய இசையை நாடும் காதுகளாகவும் அவனது மோப்ப சக்தி இனிய மணத்தை நாடும் சக்தியாகவும் மாற்றமடைந்துள்ளது (ராஜதுரை. எஸ்.வி., *1979: 46*).

மனிதர் ஒரு படைப்பாளி என்பதனாலேயே உலகத்தை அழகு மயமாக்க முயற்சிக்கின்றனர். ஒரு பாடகனின் அபஸ்வரம் ஒன்றை இனங்கண்டு கொள்ள முடிகின்றதென்றால் புலன்கள் பல்லாயிரம் ஆண்டு காலமாக வரலாற்று வளர்ச்சி அடைந்து வந்திருக்கின்றன என்று பொருள். இக்காரணம் கருதியே நமது புலன்கள் கோட்பாட்டாசிரியர் களாகி உள்ளன என மார்க்ஸ் கூறுகிறார்.

மனிதக் கண், மனிதக் காது என்பதைத் திருத்தமில்லாத அதாவது மனிதர் அல்லாத கண், மனிதர் அல்லாத காது என்று வேறுபடுத்திப் பார்க்குமாறு மார்க்ஸ் கோருகின்றார்.

ஒரு பொருளை திருத்தமில்லாத மனிதக் கண்ணால் பார்ப்பதை விட வேறுபட்ட விதத்திலேயே மனிதக் கண் பார்த்து மகிழ்ச்சி கொள்கிறது. திருத்தமில்லாத செவியை விட மனிதச் செவி வேறுபட்டது (Karl Marx, 1977: 102) என்று மார்க்ஸ் கூறுவதில் பயிற்றப்பட்ட, அதாவது மனிதத் தன்மை பெற்ற புலன்களின் முன்னேற்றத்தையே இங்கு குறிப்பிடுவதாகக் கொள்ள வேண்டும்.

பொருள் உலகம் சமூகத்தில் உள்ள மனிதனுக்குரியதாகின்றது. எல்லாப் புறப் பொருளினதும் புறப்பொருள் ஆக்கத்தின் மூலம் மனிதன் தனது தனி நபர் தன்மையை உறுதிப்படுத்துகின்றான். அதாவது, மனிதன் தானாகவே தனி நபர் தன்மையை உறுதிப்படுத்துகிறான். அதாவது, மனிதன் தானே ஒரு புறப்பொருள், புறவயத் தன்மையுடைய வனாக மாறுகின்றான். ஒவ்வொரு புலனுக்குரிய அங்கங்களும் அவற்றுக்கே உரித்தான சாரத்தைப் பெற்றுக் கொள்கின்றன. புறப்பொருள் உலகில் மனிதன் தன்னை நிலைநிறுத்துவது சிந்தனைச் செயலினால் மட்டுமல்ல. ஆனால், அவனது எல்லாப் புலன்களினாலுமாகும் என மார்க்ஸ் கூறுகின்றார் (Ibid, P: 102).

இசை உணர்வை மனிதரில் எழச் செய்வது இசையாகும். அந்த உணர்வைப் பிரதிபலிக்கும் சக்தி காதுகளுக்குரியது. அது வெறும் கேட்கும் சக்தியாக மாத்திரமல்ல. இசைதான் இசை உணர்வை மனிதரில் எழச் செய்கிறது. இசையற்ற காதுக்கு எவ்வளவு இசை இருந்தாலும் அதற்கு எந்தப் பொருளும் இல்லை. அதாவது காதுக்கு இசை பொருள் அற்றதாகி விடுகிறது. இசையை செவிப்புலன் ஒரு பொருளாய் அர்த்தமாக்கி அதில் மகிழ்ச்சியைப் பெறுவதற்கு செவிப்புலன் மனிதத் திருத்தங்களுக்கு உள்ளாக வேண்டியுள்ளது. அதாவது அதன் பூர்விக பௌதீக நிலைகளைச் செவிப்புலன் கடக்க வேண்டியுள்ளது.

இது தனி மனித முயற்சி மட்டும் அன்று. மனித சமூகம் என்ற கருத்துக்கு இங்கு இடமேற்படுகிறது. மார்க்ஸின் நோக்கில் இதனை இவ்வாறு கூறலாம். “எனது கட்டாயமான ஆற்றல்களினால்தான் ‘பொருள்’ ஒன்று உறுதி செய்யப்பட வேண்டும். எனது கட்டாய ஆற்றலுக்கு அதற்குரிய அகவய வலிமை வேண்டும். எனது புலன்கள் விரிவடையும் எல்லைகளைப் பொறுத்தமைவதே ஒரு பொருள் பற்றி

மனிதர் ஒரு படைப்பாளி என்பதனாலேயே உலகத்தை அழகு மயமாக்க முயற்சிக் கின்றனர். ஒரு பாடகனின் அபஸ்வரம் ஒன்றை இனங்கண்டு கொள்ள முடிகின்ற தென்றால் புலன்கள் பல்லாயிரம் ஆண்டு காலமாக வரலாற்று வளர்ச்சி அடைந்து வந்திருக்கின்றன என்று பொருள்.

நான் பெறும் அர்த்தமும் ஆகும். இதனால் சமூக மனிதரின் புலன்கள் சமூகமற்ற மனிதரின் புலன்களில் இருந்து வேறுபட்டதாகும். மனிதரின் மன நிறைவுக்குத் தகுதியானதாக அவை வளர்ச்சி பெறுகின்றன. அகவய மனிதப் பண்புகளின் வளர்ச்சி என்றும் இதனைக் கூறலாம். உண்மையில் இப்புலன்கள் மனித மயமாக்கப்பட்ட இயற்கையாக மாறுகின்றன. புலன்களின் இவ்விரிவாக்கம் செயற்படுவதோடு காது களுக்கு இசை, கண்களுக்கு அலங்காரங்கள் என அவற்றிற்குரிய தேவைகளும் உருவாகின்றன' என்கின்றார் மார்க்ஸ். அதாவது மார்க்ஸைப் பொறுத்த வரை இது புலன் வளர்ச்சி, இரசனையியல் உணர்வின் வளர்ச்சி என்பவற்றை மட்டும் கொண்டதல்ல. 'மனிதப் புலன்கள் மனிதனாவது,' அதாவது மனிதனைப் பூரணமாக்கும் பண்பாட்டு வளர்ச்சிகளில் ஒன்றாகும்.

## கலையும் உழைப்பும்

எனவே உழைப்பு இயக்கத்தில் இருந்துதான் கலையும், அழகும், இரசனையும் தோன்றி வளர்ந்தன.

மார்க்ஸ் மனிதரது உழைப்புச் செயற்பாடு என்பதை வேலை தொடர்பான செயல்களுக்கு அப்பால் ஒரு ஊக்கியாகக் கருதினார். இது மனித வரலாறு தொடக்கம் நீண்ட கால மாற்றங்களை அவர்களுள் ஏற்படுத்தி இருக்கின்றது. இது அவர்களது தொடர் தூண்டுதல் செயற்பாட்டின் விளைவாகும். மனிதர் தமது தேவையை நிறைவேற்ற இயற்கையோடு உறவு கொள்கின்றனர். இவ்வுறவு அவர்களுக்கும் இயற்கைக்குமிடையிலான தொடர்புகளை அதிகரிப்பதோடு அவர்களது கலைச் செயற்பாட்டின் மூலம் தமது புலன்களின் இரசனையியல் வடிவத்தை வெளிப்படுத்துகின்றது. இது புறவுலகு பற்றிய அவர்களது செயற்பாடாக அமைகின்றது. உழைப்பினை அவர்கள் வெறும் உழைப்பாக மாத்திரம் கருதாது அதற்கு மேலான ஒரு கலைச் செயற்பாடாகவும் கருதுகின்றனர்.

அழகுணர்வு என்பதும் உழைப்பினால் ஊக்குவிக்கப்பட்ட செயல் திறன். அத்திறன் மனிதனுக்குள்ளே அது நாள் வரையிலும் உறங்கிக் கிடந்தது என்பதுதான் மார்க்ஸின் கருத்தாகும்.

ஐம்புலன்களின் உருவாக்கம் என்பது இதுவரையிலான உலக வரலாறு முழுவதினுடைய செயலாகும் (Ibid, P: 103).

எனவே உழைப்பு இயக்கத்தில் இருந்துதான் கலையும், அழகும், இரசனையும் தோன்றி வளர்ந்தன. புற உலகு பற்றிய புதிய புதிய விடயங்கள் மென்மேலும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இயற்கை விதிகளும் இயற்கையின் குணங்களும் மனித வளர்ச்சிக்கு ஒத்தாசை புரிகின்றன. புதியன உருவாக உழைக்கின்றன. இன்னொரு புறம் அறிவும் மனிதப் புலனும் பயிற்சி பெறுகின்றன. புற உலகைக் கட்டுப்படுத்தும் திறனில் ஏற்படும் பாய்ச்சல் (leap) ஒவ்வொன்றும் மனிதர் அந்தப் புற உலகை எதிர்கொள்ளும் திறனில் ஏற்படும் பாய்ச்சலாகும்.

அழகுணர்வு என்பதும் உழைப்பினால் ஊக்குவிக்கப்பட்ட செயல் திறன். அத்திறன் மனிதனுக்குள்ளே அது நாள் வரையிலும் உறங்கிக் கிடந்தது என்பதுதான் மார்க்ஸின் கருத்தாகும். ஆதி கால சமுதாயத்தின் படைப்புக்கள் இன்று அழகானவை என்கின்றோம், அவை கலைப்படைப்புக்கள் என்கின்றோம். ஆனால் அவை எல்லாம் அந்த

சமூதாயத்தின் உழைப்புக் கருவிகளே (ஷிட்னி பிங்கெல்ஸ்டெய்ன், *2005: 12*).

உழைப்புக்கான கருவி என்ற சொல் மார்க்ஸினால் ஆழ்ந்த அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகின்றது. அது கருவிகள் படைக்கலங்கள் மட்டுமல்ல சித்திரம், தாலாட்டு, கவிதை, இசை, நடனம், நாடகம் என்பனவும் இவற்றின் அடிப்படையில் தான் உருவாகின்றன. இவை அகவுலகிற்கும், புற உலகிற்கும் பரஸ்பர பாதிப்பை உண்டுபண்ணுகின்றது என்பதால் இவற்றையும் 'மொழி' என அழைக்கலாம். இந்த மொழிகள் புற உலகத்தை போலி செய்தோ பிரதிபலித்தோ தன்வயப்படுத்தியோ இயங்குகின்றது. இவ்வியக்கம் மனிதரின் வாழ்க்கை அனுபவங்களையும் சிந்தனையையும் தமக்குள் கொண்டுள்ளது.

ஒரு கலைப்படைப்பை உருவாக்குவது என்பது 'இயற்கையை மனிதமயமாக்குதல்' என்ற அடிப்டையான இயக்கப் போக்கினுடைய ஒரு திட்டவட்டமான கண்கூடான வடிவமாகும். இயற்கையை மனிதன் மாற்றியமைத்தல் என்பது அதேவேளை மனிதன் தனக்கு கல்வி புகட்டிக் கொள்வதாகும். அது அவனுள் உறங்கிக் கிடக்கும் திறன்களை விழித்தெழச் செய்வதாகும். மனிதனுக்குள்ளும் இயற்கைக்குள்ளும் இருக்கின்ற வளம் அனைத்துடனும் ஒத்திசைந்திருக்கும் படியான வளர்ச்சி பெற்றுள்ள மனிதப் புலன்களை உருவாக்குவதும் ஆகும். இது இயற்கையை மனிதமயமாக்குவதன் மூலம் ஏற்படும் விளைவாகும் (Karl Marx, 1977: 103).

ஒரு கலைப்படைப்பை உருவாக்குவது என்பது 'இயற்கையை மனித மயமாக்குதல்' என்ற அடிப்டையான இயக்கப் போக்கினுடைய ஒரு திட்டவட்டமான கண்கூடான வடிவமாகும்.

இதன்படி அழகை உணர்தல் என்பது ஒரு பொருளின் வடிவமைதி யாகும். குறிப்பிட்ட பயன்பாட்டை மட்டுமல்லாது புற உலகின் மீது மனிதர் உழைப்பதன் மூலம் ஏற்படும் புலன் உணர்வுகளின் விழிப்பு, கண்டுபிடிப்பில் அவர்கள் பெறும் ஆனந்தம் ஆகியவற்றையும் தனக்குள் கொண்டுள்ளது. அவை மனிதரில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. அழகு என்பது பௌதீகப் பண்பு அல்ல. அழகை உணர்தல் என்பது வெறும் தன்னிச்சையான அகவயமான செயல் அல்ல. மாறாக அது மனிதருக்கும் புற உலகத்திற்கும் இடையிலுள்ள செயலூக்கம் உள்ள உறவாகும்.

பழங்கால மனித உழைப்பின் வெளிப்பாடுகள் கலைத்தன்மை உடையவையாக உள்ளதெனில், அதன் பொருள் மனிதருடைய உடனடித் தேவைகளைத் திருப்தி செய்வதோடு நிற்காமல் அதற்கும் அப்பாற்பட்ட நோக்கத்தோடு படைக்கும் சுதந்திரத்தை, படைப்புத் தன்மை வாய்ந்த உழைப்பின் முதற் கட்டமே. அதாவது உடனடி வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றும் செயற்பாடுகள் தமது நோக்கத்தைக் கடந்த வேறு செயற்பாடுகள் பிறப்பெடுக்க காரணமாயின எனலாம்.

பிற்கால சமுதாயம் வர்க்கங்களாக பிரிந்துவிட்ட பின் வேலைப் பிரிவினை என்பன உருவாக்கப்பட்டு கலை வடிவத்திற்கும், உற்பத்திக் கருவிகளுக்கும் இடையே நிலவிய உறவு குறையலாயிற்று.

உழைப்புச் செயலில் இருந்துதான் கலையும் அழகும் தோன்றின என்ற உண்மையினை பின்வரும் விடயம் விளக்குகிறது.

விஞ்ஞானிகளைப் போலவே மாபெரும் கலைஞர்களும் சமூக வாழ்விலிருந்தும், சமூக உணர்விலிருந்தும் தங்களை துண்டித்துக் கொள்ளக்கூடாது என்பதற்காகவே கலைத்துறையை பிரத்தியேகமானதாக குறுகியதாக மாற்றும் போக்குகளை எதிர்த்தனர் (ஷிட்னிபிங்கெல்ஸ்டெய்ன், *2005: 20).*

சுரண்டல் சமுதாயச் சூழ்நிலையில் உழைப்பானது வேதனையான ஒன்றாக இருப்பினும் படைப்பு சார்ந்த உழைப்பு மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்றாக இருக்கின்றது. ஆளும் வர்க்கம் தம்மை அலங்கரிக்கக் கலைகளைப் பேணிய போதும் மிக அரிய படைப்புக்களை படைத்தவர்கள் அவர்கள் அல்ல. மூளையும், கையும், (சிந்தனையும், உழைப்பும்) நெருங்கி ஒன்று சேர்ந்த்திருந்த கால கட்டங்களில்தான் கலை மேலோங்கியது. சமூக உழைப்புச் செயலில் இருந்து பிறக்கும் அறிவார்ந்த மற்றும் அழகியல் மிக்க விளைவுகள் உழைப்பில் ஈடுபட்டிருக்கும் மக்களை மென்மேலும் அதிகப்படியாக முன்னேற உதவியது எனலாம்.

மார்க்ஸ் தனது இரசனையியல் சார் கருத்தில் மனிதனை முழு நிறைவு செய்வதில் கலைகளும், மனித இரசனையியல் உணர்வும் முக்கிய பங்காற்றுகின்றன என்கின்றார்.

## முடிவுரை

மார்க்ஸ் தனது இரசனையியல் சார் கருத்தில் மனிதனை முழு நிறைவு செய்வதில் கலைகளும், மனித இரசனையியல் உணர்வும் முக்கிய பங்காற்றுகின்றன என்கின்றார். அத்தோடு மனிதனது அன்றாட வாழ்வியலோடு தொடர்புபட்ட உலகியல் இருப்பு, தேவை போன்றவற்றை நிறைவு செய்யும் கட்டமைப்பாக மாற்றுவதிலும், இன்னும் அவனது படைப்பின் நோக்கத்தை புலன்களினூடாகப் பூரணப்படுத்தல் என்ற அடிப்படையிலும் இரசனையியலை நோக்கமுடியும்.

## உசாத்துணை நூற்பட்டியல்

அனஸ், எம்.எஸ்.எம்., *(1999)*, இளைய மார்க்ஸின் சிந்தனை, கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வுக்கட்டுரை, பேராதனைப் பல்கலைக்கழகம் (பதிப்பிக்கப்படாதது).

முத்துமோகன், ந., *(2007)*, மார்க்சியக் கட்டுரைகள், கோடாம்பக்கம்: காவ்யா பதிப்பகம்.

முத்துமோகன், ந., *(2002)*, மார்க்சிய விவாதங்கள், கோடாம்பக்கம்: காவ்யா வெளியீடு.

ராஜதுரை, எஸ்.வி., *(1979)*, அந்நியமாதல், மதுரை: க்ரியா பதிப்பகம்.

ஷிட்னி பிங்கெல்ஸ்டெய்ன். *(2005)*, அழகும் உண்மையும், நேத்ரா, ராஜதுரை, எஸ்.வி., (மொழிபெயர்ப்பு தமிழில்) கோயம்புத்தூர்: விடியல் பதிப்பகம்.

Agnes Heller., (1974.), The Theory of Need in Marx, London.

Buhler, C., Massarik, F. (ed) (1968), The Course of u;uman Life: A study of Life calls in theu;umanistic Perspective, New York: Springer.

Istvan meszaros., (1979), Marx's theory of Alienation, London: Merlin press.

John Dewey., (1963), Re construction in philosophy: Becon press.

Karl Marx and Engels, (1976), Germen Ideology, Moscow: Progress Publishers.

Karl Marx and Engels., (1967), The Communist Manifesto, With an introduction by A.J.P Taylor, England: Penguin books.

............................ (1971), On the paris communa, Moscow: Progress Publishers.

............................ (1976), Germen Ideology, Moscow: Progress Publishers.

............................ (1977), Selected works vol-01, Moscow: progress publishers

Karl Marx., (1977), Economic and Philosophic manuscripts of 1844, Moscow: Progress Publishers.